DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | | |
|---|---|---|
| Calender | | |
| Miscellaneous | Case No | CC 139/17 |
| Priliminary Register | | |
| Sessions | | |
| | Prosecution | PW 3 |
| Deposition of witness for | Defence | |
| | Court | |
| Name | | Tr. Ponrajan |
| Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Caste | | |
| Calling | | |
| Religion | | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

10.06.2019 முதல் விசாரணை:

நான் தற்போது மாடக்குளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2015 ஜனவரி முதல் 2018 ஆகஸ்டு மாதம் வரை தனக்கன்குளத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். கருப்பாயி அம்மாள் இறந்து விட்டதாகவும் அவருக்கு கச்சம்மாள் என்ற மாயக்காள் மற்றும் சீனியம்மாள் என்ற இரண்டு மகள்கள் உள்ளதாக பரிந்துரை செய்ததன் அடிப்படையில் 07.09.2015ம் தேதி திருப்பரங்குன்றம் துணை தாசில்தார் அவர்களால் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த வழக்கில் சர்வேஎண். 163/2 தனக்கன்குளத்தில் உள்ள 23 செண்ட் தொடர்பாக ஏ ரிஜிஸ்டர் அடங்கல் சம்பந்தமாக நான் எதுவும் சான்று அளிக்கவில்லை. அது தொடர்பாக புலப் படம், சிட்டா ஆகியவை தற்போதைய கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தால் தான் தெரியும் எனக்கு எதுவும் தெரியாது.

குறுக்கு விசாரணை:

வாரிசு சான்றிதழுக்கு பரிந்துரை மட்டும் தான் நான் செய்தேன். நான் பரிந்துரை செய்த வாரிசு சான்றிதழுக்கு அடிப்படையான இறப்பு சான்றிதழ் கருப்பாயி என்ற ஆண் நபருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருக்கலாம். கருப்பாயி என்பவரின் இறப்பு சான்றிதழில் ஆண் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பதிவாகிஉள்ளது. இறப்பு பதிவேட்டை பார்த்தால் உண்மை அறிய முடியும். என்னால் பரிந்துரைக்கப்பட்ட வாரிசுசான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ் இரண்டும் இந்த வழக்கிற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.